பக்கங்கள்:-21

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 09 | வெள்ளிக்கிழமை | 23.01.2026 | அதிர்வு 176 |
|---|---|---|---|---|---|


## நாடெங்கும் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்புப் போர்

### சுகாதாரத்துறை முடங்கும் அபாயம்




நாடு தழுவிய ரீதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் 48 மணிநேரம் அடையாளப் பணிப் புறக்கணிப்புப் 06

# எங்கள் ஆட்சியை அசைக்க எதிரணிக்குச் சக்தியில்லை

## அடுத்த தேர்தல்களிலும் என்.பி.பியே வெற்றி என்றும் அடித்துக் கூறுகின்றார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க




எமது ஆட்சியை எந்த வகையிலும் எதிரணிகளால் கவிழ்க்க முடியாது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியாகத் தெரிவித்தார்.

தேசிய அம்மக்கள் சக்தி அரசுக்கு மக்கள் ஆதரவு தொடர்ச்சியாக வலுப்பெற்று வருகின்றது என்றும், அதனால் அரசியல் ரீதியான எந்தச் சவாலையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்றும் ஊடகங்களிடம் அவர் கூறினார். 06

# மண்மேடு சரிந்து வீழ்ந்து மூவர் பரிதாப உயிரிழப்பு!

## ஹோட்டல் நிர்மாணப் பணியின்போது துயரம்

மண்மேடு சரிந்து வீழ்ந்து மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

அஹங்கம பெலஸ்ஸபகுதியில் ஹோட்டல் நிர்மாணப் பணியின்போது நேற்று மதியம் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை, அனுராதபுரம் மற்றும் மாத்தறை பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.






பிரதான எதிர்க்கட்சி அல்லாத பிற எதிர்க் கட்சிகளின் சார்பில் அரசமைப்புக் கவுன்ஸிலில் அங்கம் வகிப்பவரான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் வரிசையில் இருந்து காட்டமான குரல்கள் நாடாளுமன்றத்தில் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியின் பிரமுகரான தயாசிறி ஜெயசேகர நேற்றுத் தாறுமாறாக சிறிதரனைப் பிய்த்து உதறினார்.

ஆனால் சிறிதரனுக்காகக் குரல் கொடுத்து, அவரைக் காபத்து பண்ணி, பாதுகாக்க அரசுத் தரப்பு தவறவில்லை. இரண்டு, மூன்று அரசுத் தரப்பு எம்.பிக்கள் அவருக்காகக் குரல் எழுப்பினர் எனக் கூறப்படுகின்றது

அரசாங்கத்தின் பேச்சாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, சிறிதரனைப் பாதுகாக்கும் விதத்தில் உரை ஒன்றை நிகழ்த்தினார். (அவரது சிங்கள உரையின் காணொலியை இணைத் துள்ளேன்.) லஞ்ச, 06

# வாழைச்சேனையில் கிளினிக் நிலையம் நடத்தி வந்த போலி வைத்தியர் கைது!

(கனகராசா சரவணன்)

வைத்தியர் போல உடையணிந்து படங்களை முகநூலில் பதிவேற்றி, தான் வைத்தியர் என வீடு ஒன்றில் மருத்துவ கிளினிக் நிலையம் ஒன்றை கடந்த 3 வருடங்களாக நடத்தி வந்த போலி வைத்தியர் ஒருவரை நேற்று வியாழக் கிழமை வாழைச்சேனை பொலிஸ் பிரிவி லுள்ள செம்மண் ஓடை பிரதேசத்தில் வைத்து மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்து தங்களிடம் ஒப்படைத்தனர் என வாழைச்சேனைப் பொலிஸெ தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின ருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபரும் சட்டத்தரணியுமான வர்ண ஜயசுந்தரவின் ஆலோசனையில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.லலித் லீலா ரத்னாவின் வழிகாட்டலில், மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதி காரியின் தலைமையிலான குழுவினர் நேற்று இந்த வைத்தியரின் வீட்டில் நடத்தி வந்த கிளினிக் சென்றரை முற்றுகையிட்டனர்.

இதன்போது அந்த வைத்திய சாலை அனுமதி பத்திரம் மற்றும் வைத் தியர் அடையாள அட்டைகளை கேட்டு சோதனையில் ஈடுபட்ட போது அவரிடம் எந்தவிதமான அனுமதிப் பத்திரமே வைத்



தியராக அடையாளப்படுத்தும் வைத் திய அடையாள அட்டையோ இருக்க வில்லை.

இந்த நபர் ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் மருத் துவ துறையில் கல்வி கற்று வந்துள்ளார் எனவும், போதிய புள்ளிகள் இல்லாமல் மருத்துவ துறைக்கு தெரிவு செய்யப்படா மல் உள்ள நிலையில் கண்டிக்கு சென்று அங்கு மருத்துவ துறை தொடர்பான கல்வி கற்று வந்த நிலையில் தனது சொந்த ஊரான செம்மண் ஓடையில் உள்ள தனது வீட்டுக்கு திரும்பி வந்து வைத் தியசாலையில் சிகிச்சையில் ஈடுபடும் போது வைத்தியர்கள் அணியும் ஆடை போல உடையை அணிந்து கொண்டு தன்னை தானே படம் எடுத்துக் கொண்டார் எனக் கூறப்படுகின்றது.

பின்னர் போலியாக முகநூல் கணக்கு ஒன்றை ஆரம்பித்து அதில் கண்டி பல்லேகல பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் போல போலியான தரவுகள் மற்றும் வைத்தியர் போல உடையணிந்த படங்களை தரவேற்றம் செய்து வீட்டில் ஒரு தனியார் வைத்திய கிளினிக் ஒன்றை ஆரம்பித்து கடந்த 3 வருடங்களாக நோயா ளிகளுக்கு மருந்துகளை வழங்கி இயங்கி வந்துள்ளார் என்பது பொலிஸாரின் ஆரம் பக்கட்ட விசாரணையில் தெரியவந் துள்ளது.

இதனையடுத்து அந்த 33 வயது டைய நபர் கைது செய்யப்பட்டார். அங்கி ருந்த மருந்துஒ பொருள்களான சான்றுப் பொருள்களை மாவட்டக் குற்ற விசார ணைப் பிரிவினர் மீட்டு ஒப்படைத் துள்ளனர் எனவும், இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரி வித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இணுவில் உலகப் பெருமஞ்சத் திருவிழா தேசிய நிகழ்வாக அறிவிக்கப்பட வேண்டும்

## வலி தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் பிரகாஷ் கோரிக்கை





இணுவில் கந்தசுவாமி கோவில் உலகப் பெருமஞ்சத் திருவிழா, தேசிய நிகழ்வாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா பிரகாஷ் கோரி யுள்ளார்.

யாழ். இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூச தின உலகப் பெருமஞ்சத் திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவின் விரிவான ஏற்பாடுகள் சம்பந்தமாக ஆராயும் கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் பிற் பகல் இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது குடிதண்ணீர், சுகா தாரம், வீதி தடைகள், வாகனப் பாதுகாப்பு நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்துக் கலந் துரையாடப்பட்டது.

கலந்துரையாடலில் மல்லாகம் நீதி மன்ற பதிவாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா பிரகாஷ், கலாநிதி ஆறு திருமுரு கன், பொலிஸார், ஆலய குருக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்த னர்.



# இந்தோனேசியக் கடற்படைக் கப்பல் நேற்று இலங்கையை வந்தடைந்தது

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

இந்தோனேசியக் கடற்படையின் 'KRI SULTAN ISKANDAR MUDA - 367' என்ற போர்க்கப்பல் நேற்று வியாழக் கிழமை விநியோக மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கையை வந்தடைந்தது.

இலங்கைக் கடற்படை இந்தக் கப்பலை கடற்படை மரபுகளுக்கு இணங்க கொழும்பு துறைமுகத்தில் வரவேற்றது.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந் துள்ள Sigma Corvette FS என்ற 'KRI SULTAN ISKANDAR MUDA - 367' போர்க் கப்பல் 90.71 மீட்டர் நீளத்த கொண்டது. கப்பலின் கட்டளை அதிகாரியாக கமாண் டர் Annugerah Anurullah கடமை யாற்றுகின்றார்.

இந்தப் போர்க்கப்பல் இலங்கை யில் தங்கியிருக்கும் போது, கப்பல் குழு வினர் கொழும்பு பகுதியில் உள்ள கவர்ச்சிகரமான சுற்றுலா தலங்களை பார்வையிட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த விஜயம் இரு நாடுக ளின் கடற்படைகளுக்கு இடையே தொழில்முறை அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கும், இடைச்செயல்பாடு மற்றும் புரிதலை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும்.







# பேரிடர் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவை இனியும் தாமதிக்காமல் வழங்குங்கள்!

## சத்தியலிங்கம் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்தல்

நாட்டில் அண்மைய இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈட்டுக்கொடுப்பனவை தாமதமின்றி வழங்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கடந்த வருடம் நவம்பர் மாத இறுதியில் எமது நாட்டை மிகமோசமாக தாக்கிய பேரனர்த்தமாக டித்வா புயலும் அதன் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம், மண்சரிவு போன்றவற்றால் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்து சேதம் என்பன எமது நாட்டின் வளர்ச்சியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் படிப்படியாக ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் விழுந்த பேரிடியாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.


கடந்த 25 வருடங்களில் இந்த நாடு 4 பேரவலங்களை சந்தித்துள்ளது. 2004 இல் ஏற்பட்ட சுனாமி பேரவலம், 2009ல் வடக்கில் நடைபெற்ற இறுதியுத்தம், 2020ல் ஏற்பட்ட கொரோனா நோய்த் தாக்கம், கடந்த வருடம் ஏற்பட்ட “டித்வா புயல்” அனர்த்தம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பேரவலங்களிலிருந்த மீண்டமை போன்று இந்த அனத்தத்திலிருந்தும் மீண்டு வழமைக்கு திரும்பவேண்டிய கட்டாய சூழ்நிலையில் நாம் அனைவரும் உள்ளோம்.

இயற்கை அனர்த்தம் என்பது நமது கட்டுப்பாட்டுக்கு மீறியது. அதனை யாராலும் தடுக்கமுடியாது. எத்தனை நவீன வசதிகள் இருந்தாலும் அனர்த்தத்தை தடுக்கமுடியாது. ஆனால் அந்த அனர்த்தங்களினால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளை, சேதாரங்களை தடுப்பதற்கான அல்லது குறைப்பதற்கான முன்னாயத்தங்களை செய்வதுடன் அனர்த்தத்தினால் ஏற்பட்ட விளைவுகளையும் அனர்த்தத்திற்கு பின்னரான கால முகாமைத்துவமும் மிக முக்கியமானவை. அதுவே அனர்த்த முகாமைத்துவமாகும்.

உலகளாவிய ரீதியில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக 4 படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன. தடுத்தல், எச்சரிக்கை விடுத்தல் – தயார்படுத்தல், எதிர்நோக்குதல், மீட்பு பணி அவசர நிவாரணம், மீள்நிர்மாணம்.

அந்தவகையில் நவம்பர் மாதம் 25 தொடக்கம் 30 வரையான காலப்பகுதியில் பாரிய அனர்த்தமொன்று நடைபெறப்போவதாக பல்வேறு சமிக்ஞைகள் முன்கூட்டியே கிடைத்தபோதிலும் முறையாக தயார்படுத்தல் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு துறைசார்ந்த திணைக்களத்தின் மீது சுமத்தப்படுகின்றது. இதனை எதிர்க்கட்சிகள் அரசியலாக்குகின்றன என்று கூறி அரசாங்கம் தனது



பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

இளம் குடும்பத்தலைவன் தணிகாசலம் பத்மநிகேதன் இராஜாங்கனையில் ஏற்பட்ட அனர்த்தத்தில் உயிரிழந்தார் அல்லது கொல்லப்பட்டார். அந்தச் சாரதி மேல் கொலை என்றுதான் இராஜாங்கனை பொலிஸார் நொச்சியாகம நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அவ்வழக்கில் ஒரு கொலை மற்றும் 64 பயணிகளை கொலைசெய்ய முயற்சித்தார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்படவேண்டியவர்கள் யார்? முறையான முன்னறிவித்தல் இல்லாமல் இராஜாங்கனை நீர்த்தேக்கத்திலிருந்து நீரை திறந்தவர்களா? அல்லது அனர்த்தம் நிகழ்ந்த இடத்திற்கு பஸ் செல்வதற்கு அனுமதித்த காவல்துறையினரா? அல்லது நாடு ஒரு அனர்த்தத்தை எதிர்கொண்டிருந்த நிலையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்த நேசண்ட் டிரஸ்ட் வங்கி நிர்வாகத்தினரா? அல்லது எல்லாவற்றிற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தேசிய அனர்த்த முகாமைத்துவ திணைக்களமா? – என்பதை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும்.

இந்த துர்ப்பாக்கிய சம்பவம் நிகேதனுக்கு மாத்திரம் நிகழவில்லை. இவ்வாறு பல நிகேதன்கள் உயிரிழந்துள்ளனர். பொறுப்புச் சொல்பவர் யார்?

அனர்த்தத்தில் உயிரிழப்புகள் ஏற்படுவது பல சந்தர்ப்பங்களில் தடுக்க முடியாதென்றாலும் இவ்வாறான தவிர்க்கக்கூடிய சந்தர்ப்பங்களை தடுக்காதவர்களை பொறுப்புக்கூறலில் இருந்து காப்பாற்றக்கூடாது.

எனினும் அனர்த்தம் ஏற்பட்டபோது முப்படையினரும் பொலிஸாரும் ஏனையோரும் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமையை நாம் குறைத்து மதிப்பிடமுடியாது. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்படை சிப்பாய்கள் உயிரிழந்தமை, விமானியின் உயிரிழப்பு ஆகியன வேதனையான சம்பவங்களாகும்.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையங்கள் முறையாக செயற்பட்டனவா என்ற கேள்வியும் இல்லையெனின் செயற்படமுடியாமைக்கான காரணங்கள் என்ன என்பதையும் ஆராய்ந்து எதிர்காலத்தில் அவர்கள் சிறப்பாக செயற்பட தேவையான வளங்களை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

மீட்பு பணி வேலைகள் நேரடியாக ஜனாதிபதியின் நேரடி கண்காணிப் பின்கீழ் நடைபெற்றன.

இலங்கையில் இதுவரை காலமும் செயற்பட்ட அனர்த்த முகாமைத்துவத்தில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் உள்ளனர், அந்த வளம் பாவிக்கப்பட வேண்டும்.

அனர்த்தம் நடைபெற்றவுடன் உடனடியாக பல்வேறு நாடுகள் உதவிகள் செய்தன. அவற்றிற்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனினும் அனர்த்தத்திற்கு பின்னரான நிலைமை தொடர்பில் நாம் கூடிய கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கின்றோம். நான் அறிந்தவரையில் வீடுகள், வியாபார நிலையங்களுக்குள் நீர் புகுந்ததை தொடர்ந்து அவற்றினை சுத்தப்படுத்துவதற்கான கொடுப்பனவு ரூபா 25,000 பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் தளபாடங்கள் வீட்டு உபகரணங்கள் சேதமடைந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரை முற்றுப்பெறவில்லை.

அத்துடன் குறிப்பாக எமது பிரதேசத்தில் பயிர்கள் அழிவடைந்தவர்களுக்கான கொடுப்பனவுகள், கால்நடைகள் இறந்தமைக்கான கொடுப்பனவுகள் தாமதமாகவே நடைபெறுகின்றன.

கிராம சேவகர்களின் பற்றாக்குறையே தாமதம் ஏற்படுவதற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

போதிய ஒழுங்குகளை செய்வதனூடாக தாமதத்தை குறைக்க வேண்டும்.

அத்துடன் உடைப்பெடுத்த குளங்கள் தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றினை நிரந்தரமாக புனரமைப்பதற்காக இந்த வருடம் நிதியொதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதனை விட முக்கியமானது அனர்த்த முகாமைத்துவத்தின் முதல் இரண்டு படிநிலைகளையும் பலப்படுத்தி எதிர்காலத்தில் பாதிப்புகளை குறைப்பதற்கான பொறிமுறை உருவாக்கப்படுதல் வேண்டும்.

பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டமைக்கான காரணம் முறையான வடிகாலமைப்பு இல்லாமை, வடிகான்கள் சட்டவிரோதமாக தடுக்கப்பட்டுள்ளமை, நீண்டகாலமாக நீர்வழிந்தோடும் வடிகான்கள் முறையாக பராமரிக்கப்படாமை போன்றனவாகும். உதாரணமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றிற்கு சொந்தமான வடிகால்களை யார் துப்பரவு செய்வது என்ற சர்ச்சை, சம்பந்தப்பட்ட திணைக்களமா? உள்ளூராட்சி மன்றங்களா? இன்றும் தொடர்கிறது.

எனவே அனர்த்த முகாமைத்துவம் என்பது குறிப்பிட்ட ஒரு திணைக்களத்தின் வேலை அல்ல. இது ஒரு கூட்டு முயற்சி. அனைவரும் ஒத்துழைத்தால் மட்டுமே எதிர்காலத்தில் சேதாரங்களை குறைக்கமுடியும். – எனத் தெரிவித்தார்.





# கிழக்கில் வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு இன்றைய தினத்தில் முடிவுக்கு வரவேண்டும்

## இல்லையேல் மக்கள் போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கை

(கனகராசா சரவணன்)

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை வைத்திய பணிப்பாளரை இடமாற்றம் செய்யுமாறு கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் 4 நாள்களாகப் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் வைத்தியர்கள் ஈடுபட்டு வருவது கண்டிக்கப்பட வேண்டும். அத்தோடு இந்த போராட்டத்தை நாளை (இன்று) வெள்ளிக்கிழமை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். இல்லாவிடில் காந்தி பூங்காவில் மக்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டமாக வைத்திய பணிப்பாளர் காரியாலயத்தை முற்றுகையிடுவோம் என ஈ.பி.டி.பி. கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு "வொய்ஸ் ஒவ் மீடியா" ஊடகக் கற்கை நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி. கட்சியின் மட்டு. ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார், மாவட்ட அமைப்பாளர் எஸ்.சிவானந்தராஜா, அம்பாறை மாவட்ட அமைப்பாளர் ஆனந்தன் ஆகியோர் கூட்டாக இணைந்து இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளரை இடமாற்றக் கோரி கிழக்கு மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் அரச வைத்திய சங்கத்தினர் கடந்த 4 தினங்களாக பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

வைத்தியதுறையில் சீர்கேடு இருந்தால் வைத்திய நிர்வாகத்துக்கு உள்ளேயே கூடி ஆராய்ந்து அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் அதற்கான தீர்வுகளைக் காண வேண்டும். மக்களால் வைத்திய துறை அதிகாரிகளுக்கும் எந்த ஆபத்துக்களும் எந்த அசௌகரியங்கள் ஏற்படவில்லை. எனவே வைத்திய அதிகாரிகளுக்குள் ஏற்படுகின்ற இவ்வாறான பிரச்சினைகளுக்கு நீங்கள் ஒன்று கூடி அதற்கான முடிவை எடுக்க வேண்டும். மக்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்தக்கூடாது .

அக்கரைப்பற்று பிரதேசத்தில் நடைபெற்றால் அக்கரைப்பற்று வைத்திய சாலையில் உள்ள வைத்தியர்கள் மட்டும் போராடுவதே சிறந்தது. வைத்தியர்களுக்கு போராடுவதற்கு உரிமை உண்டு. எந்த வைத்தியசாலையில் பிரச்சனையே அந்த அந்த பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளில் போராட வேண்டும். இதைவிடுத்து கிழக்கு மாகாணம் தழுவிய போராட்டம் செய்ய கூடாது எனக் கேட்டுக் கொள்கிறோம்.

டித்வா புயலால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக டெங்கு மற்றும் எலிக்காய்ச்சல் தொற்று நோய்கள் அதிகரித்துள்ளன. இந்த நேரத்தில் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு.

தொற்று நோய்கள் அதிகரித்தால் வைத்தியர்கள் அவர்களைப் பரிசோதித்தால்தான் வந்தது டெங்கு தொற்று நோயா அல்லது எலிகாச்சல் என கண்டறிய முடியும். எல்லா மக்களும் தனியார் வைத்தியசாலைக்கு சென்ற மருந்து எடுப்பதற்கு வசதி வாய்ப்புகள் இல்லை.

இன்று மாவட்டத்தில் எத்தனையே பேர் பஸ்ஸ/க்குப் பணம் இல்லாமல் கடன் பட்டு மட்டு போதனா வைத்திய சாலைக்கு செல்கின்றனர். இலவசமாக நோய்க்கான மருந்தை எடுக்க முடியும் எனத் தூரப் பிரதேசங்களில் இருந்து வந்து தொடர்ச்சியாக நான்கு நாள்களாக மருந்து எடுக்க முடியாமல் திரும்பி சென்று கொண்டிருக்கின்றனர்.

அதோடு நீங்கள் மக்களின் வரிப் பணத்தில் இலவசமாக வைத்திய துறையில் கல்வி கற்று அதே வரிப்பணத்தில்தான் சம்பளம் வாங்குகின்றீர்கள். எனவே இந்தச் சம்பளங்களையும் பெற்று விட்டு மக்களை இக்கட்டான நிலைக்கு தள்ள கூடாது என்பதுடன் மக்களின் உயிரோடு நீங்கள் விளையாடக்கூடாது.

எனவே இதனை கவனத்தில் எடுத்து இந்த போராட்டத்தை நாளையுடன் (இன்றுடன்) முடிவுக்கு கொண்டுவந்து வரவேண்டும். இல்லாவிட்டால் இந்த போராட்டத்துக்கு எதிராக நாளை சனிக்கிழமை மட்டு காந்தி பூங்காவில் மக்கள் அணி திரண்டு பாரிய ஆர்பாட்டமாக வைத்திய அதிகாரி பணிமனை முற்றுகை யிடுவோம். – என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# இலங்கைக் கலைஞர்களின் பங்கேற்பில் உருவான "கண்ணம்மா" நாளை யாழ். ராஜா திரையரங்கத்தில்




முற்று முழுதாக இலங்கை கலைஞர்களின் பங்கேற்பில் தயாரிக்கப்பட்ட "கண்ணம்மா" திரைப்படத்தின் சிறப்புத் திரையிடல் யாழ். ராஜா திரையரங்கில் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட படக்குழு இதனைத் தெரிவித்தது.

ஈழப்போராட்டத்தின் பாதிப்பையும் வலிகளையும் வெளிப்படுத்தும் விதமாக உருவாகியுள்ள கண்ணம்மா திரைப்படத்திற்கு பொதுமக்கள் ஆதரவளிக்க வேண்டும் என படக்குழுவினர் வேண்டுகோள் விடுத்தனர்.

2J மூவீஸ் தயாரிப்பில் யூட் சுகியின் இயக்கத்தில் உருவாகியுள்ள கண்ணம்மா திரைப்படத்திற்கு பிரசாந் கிருஷ்ண பிள்ளை இசையை வழங்கியுள்ளதுடன் படத்தொகுப்பை சிவநேசன் மேற்கொண்டுள்ளார்.

மூத்த கலைஞர்களான ராஜா மகேந்திரசிங்கம், ஜூட் கொலின்ஸ், சபேசன் சண்முகநாதன், கேப்டன் பாஸ்கரன், சுவிஸ் ரகு, ஜாஸ்மின் (பவுண் அக்கா), ஜீவேஸ்வரன் உள்ளிட்டவர்களுடன் பல இளம் கலைஞர்களும் இதில் நடித்துள்ளார்கள்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளரையும், கணக்காய்வாளர் நாயகத்தையும் நியமிக்கும் விடயங்களில் சரியானவர்கள் நியமிக்கப்படுகின்றமையைக் குழப்ப வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கட்சியினர் இப்படி சிறிதரனைப் போட்டுத் தாக்குகின்றனர் என்று




அவர் குறிப்பிட்டார்.

பிரதமருக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சி கொண்டுவர முயன்றுள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் சிறிதரன் ஒப்பமிட மறுத்தமையினாலேயே அவருக்கு எதிராக இத்தகைய தாக்குதல்களை எதிர்க்கட்சியினர் முன்னெடுக்கின்றனர் என்ற சாரப்பட அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

சிறிதரன் என்று அல்ல, தமிழரசுக் கட்சியே இந்தப் பிரேரணையில் ஒப்பமிடுவதில்லை என்ற முடிவை எடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எது, எப்படி என்றாலும் அரசு தரப்புக்கு சிறிதரன் முண்டு கொடுக்கின்றார் என்று அவருக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் விதத்தில், அவருக்காக – அவருக்கு ஆதரவாக – ஆளும் தரப்பினர் குரல் எழுப்புகின்றமை அமைந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

* * *

நாளை சனிக்கிழமை காலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை அதன் தலைவரான திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் எம்.பி. தலைமையில் நடத்தும் பொங்கல் விழா திருகோணமலையில் இடம்பெறுகின்றது.

கடந்த பொதுத்தேர்தல் முடிந்து சற்றுக் காலத்தில் கடந்த பொங்கல் நாள் வந்தது. அப்போதும் குகதாசன் இது போன்ற பொங்கல் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். தமிழரசுக் கட்சி வழக்கு சூடு பிடித்திருந்த அச்சமயத்தில் சிறிதரன், சுமந்திரன் உட்பட எல்லோரையும் குகதாசன் அந்தப் பொங்கலுக்கு அழைத்திருந்தார். ஆனால் சுமந்திரன் பங்குபற்றும் நிகழ்வில் தாம் பங்குபற்ற மாட்டார் என சிறிதரன் கோடி காட்டியமையால் நெருக்கடியை எதிர்கொண்ட குகதாசன் விவகாரத்தைச் சமாளிப்பதற்காக அந்தப் பொங்கல் நிகழ்ச்சியையே அப்போது ரத்துச் செய்து விட்டார்.

இப்போது மீண்டும் பொங்கல் நிகழ்வு நடத்துகிறார். இச்சமயத்தில் சுமந்திரன் கட்சியின் பொதுச் செயலாளராகிவிட்டார். கட்சியின் எல்லா எம்.பிக்களுக்கும், கட்சியின் தலைவர், செயலாளர் எல்லோருக்கும் அழைப்பு அனுப்பி, பொங்கல் நிகழ்வை நாளை காலை குகதாசன் திருகோணமலையில் நடத்துகிறார்.

நாளை மதியம் தமிழரசுக் கட்சியின் தலைவரும் செயலாளரும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களோடு கலந்துரையாடுகின்றனர்.

அதன் பின்னர் மாலை 5 மணிக்கு திருகோணமலையில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூடுகின்றது.

கடந்த தடவை அரசியல் குழு வவுனியாவில் கூடிய போது அந்தக் கூட்டத்துக்கு சிறிதரன் வருகை தந்திருக்கவில்லை. அந்தக் கூட்டத்தில் அரசமைப்பு கவுன்சிலில் இருந்து சிறிதரனை விலகுமாறு பணிப்புரை விடுக்கும் முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

அது பற்றிய அறிவித்தல் சிறிதரனுக்குக் கடிதம் மூலம் பொதுச் செயலாளரால் வழங்கப்பட்டுள்ள நிலையில், சிறிதரன் அரசமைப்புக் கவுன்ஸிலில் உறுப்பினர் பதவியை விட்டு விலகும் எண்ணத்தில் இல்லை என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்தப் பின்புலத்தில் நாளை மாலை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் கூட்டம் நடைபெறுவது முக்கியத்துவம் பெறுகிறது. நாளைய அரசியல் குழுக் கூட்டத்தில் பெரும்பாலும் சிறிதரன் பங்குபற்றுவார் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## எங்கள் ஆட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்தி அரசு நாட்டின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களைப் பொறுப்புடன் முன்னெடுத்துவருகின்றது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடந்த கால ஆட்சிகளால் உருவாக்கப்பட்ட நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காகத் தற்போதைய அரசு திடமான முடிவுகளை எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எதிரணிகள் இந்த அரசை நிலையற்றதாக காட்ட முயற்சிக்கின்றன என்று குற்றம்சாட்டிய அமைச்சர், அவை அனைத்தும் அரசியல் இலாபத்துக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளே என்றும் குறிப்பிட்டார்.

மக்கள் உண்மையைப் புரிந்து கொண்டுள்ளதால், இவ்வாறான முயற்சிகள் எதுவும் வெற்றியடையாது என்றும் அவர் கூறினார்.

மேலும், எதிர்வரும் தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றிவாகை சூடும் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டு மக்கள் அரசின் செயற்பாடுகளை நேரடியாக அனுபவித்து வருவதால், மீண்டும் வலுவான ஆதரவை வழங்குவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஊழல் அரசியலை முற்றாக ஒழிப்பதே தேசிய மக்கள் சக்தியின் பிரதான இலக்கு என்றும், அதற்காக எந்த அரசியல் அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் செயற்படுவதாகவும் அவர் கூறினார்.

சுத்தமான அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குவதில் அரசு உறுதியாக இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, எதிரணிகளின் விமர்சனங்களும் அரசியல் முயற்சிகளும் அரசின் பயணத்தைத் தடுக்க முடியாது என்றும், மக்கள் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தி அரசு தனது திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்லும் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மீண்டும் உறுதிப்படுத்தினார்.

## ஹாலிஎல விநாயகர் மணவாளக்கோல விழா

(பசறை: நடராஜா மலர்வேந்தன்)

பதுளை, ஹாலிஎல அருள்மிகு ஸ்ரீவீர சக்தி விநாயகப் பெருமான் ஆலய ஆறாம் ஆண்டு வருஷாபிஷேக மணவாளக்கோல விழா நாளை நடைபெறுகின்றது.

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் மூலஸ்தான பூஜை, விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசகம், கடஸ்தாபனம், கும்ப பூஜை, சங்கு பூஜை, விசேட திரவிய ஹோமம்,அஷ்டோத்திர சங்காபிஷேகம், வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல் ஆகிய கிரியை வழிபாடுகள் நடைபெற்று சுவாமி உள்வீதி உலா நடைபெறும்.

இதனை தொடர்ந்து மகேஸ்வர பூஜை நடைபெறுவதோடு அடியார்களுக்கு அன்னதான பிரசாதம் வழங்கப்படும்.

ஸ்ரீவீரசக்தி விநாயகப் பெருமானின் மணவாளக்கோல விழாவில் கலந்து கொண்டு இறை மெய்யருளை பெற்றுய்யும்மாறு ஆலய அறங்காவலர் சபையினர் மெய்யடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

## ஆழியவளையில் கைக்குண்டு மீட்பு!



(மரியசீலன் திலைக்ஸ்)

யாழ். வடமராட்சி கிழக்கு, ஆழியவளைப் பகுதியில் நேற்று கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஆழியவளைப் பகுதியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த நபர் ஒருவர் கைக்குண்டைக் கண்டதும் அது தொடர்பில் மருதங்கேணி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்து கைக்குண்டைப் பார்வையிட்ட மருதங்கேணி பொலிஸார், அதைப் பாதுகாப்பாக அகற்றினர்.

---

## நாடெங்கும் வைத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இலவச சுகாதார சேவை மற்றும் வைத்தியர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு என்பன தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை அரசு நிறைவேற்றவில்லை என்பதாலேயே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

எனினும், சிறுவர் வைத்தியசாலைகள், புற்றுநோயாளர் வைத்தியசாலைகளில் இந்தப் போராட்டம் இடம்பெறாது என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.



# சம்பிக்க ரணவக்கவுக்கு எதிரான மனுவை நிராகரித்தது மேன்முறையீட்டு நீதிமன்றம்

2016ஆம் ஆண்டு இராஜகிரிய பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து தொடர்பில், முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கொழும்பு மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை தள்ளுபடி செய்யக் கோரி சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனு நேற்று வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது,சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவை பராமரிப்பது சாத்தியமில்லை என மனுதாரரின் சட்டத்தரணியிடம் நீதியரசர்கள் ஆஜயம் சுட்டிக்காட்டியது.

அதன்படி, சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவை நிராகரிக்கப்படுவதாக நீதியரசகர்கள் ஆஜயம் உத்தரவிட்டுள்ளது.



# 800 இற்கும் மேற்பட்டவர்கள் போதைப்பொருளுடன் கைது

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் முன்னெமுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 809 பேர் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 815 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், 09 பேர் மறுவாழ்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இந்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப் பொருள்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதன்படி, 475 கிராம் ஹெரோயின், 383 கிராம் ஐஸ், 04 கிலோகிராம் 743 கிராம் கஞ்சா, 38,370 கஞ்சா செடிகள், 02 கிராம் குஷ் ரக போதைப் பொருள், 88 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 102 போதை மாத்திரைகள், 113 கிராம் 940 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 01 கிலோகிராம் 350 கிராம் மாவா போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பரவும் தொழுநோய்

2025 ஆம் ஆண்டில் நாட்டில் மொத்தம் 1,282 தொழுநோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர் என தொழுநோய் ஒழிப்பு பிரச்சாரத்தின் இயக்குநர் வைத்தியர் யசோமா வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

புதியதாக அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் சுமார் பத்து வீதம் பேர், அதாவது சுமார் 123 பேர், 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

புதிதாக அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் கிட்டத்தட்ட எட்டு வீதம் பேர் ஏற்கனவே நோயறிதலின் போது குறைபாடுகளை உருவாக்கியிருந்தனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில், “தேவையான அனைத்து சிகிச்சை முறைகளும் அரசு வைத்தியசாலைகளில் இலவசமாக வழங்கப்படுவதுடன், சிகிச்சை வழங்குவதில் எவ்வித தாமதமும் ஏற்படவில்லை” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1995ஆம் ஆண்டளவில் தொழுநோய் ஒழிக்கப்பட்ட நாடாக இலங்கை அறிவிக்கப்பட்ட போதிலும், 2000 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் தொழு நோயாளர்கள் இலங்கையில் பதிவாகி வருகின்றனர். சமீபத்திய புள்ளி விவரங்கள் புதிய நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பைக் காட்டுகின்றன. எனவே இலங்கை இப்போது அதிக பாதிப்புள்ள நாடாகக் கருதப்படுகிறது.

2020 இல் 1,213 புதிய நோயாளிகள் கண்டறியப்பட்டனர். 2021இல் 1,026 பேர் தொழுநோயாளிகள் என அடையாளம் காணப்பட்டனர். 2022இல் 1,300க்கு மேல் புதிய நோயாளிகள் பதிவானார்கள். அவர்களில் 10.6 வீதத்தினர் குழந்தைகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகில் சிறுவர் தொழுநோயாளர்கள் அதிகளவில் பதிவாகும் ஐந்து நாடுகளில் ஒன்றாக இலங்கையும் உள்ளது என்று கூறப்படுவது மிகுந்த கவனிப்புக்கும் கவலைக்கும் உரியதாகும்.

ஒவ்வொரு ஆண்டிலும் ஜனவரி கடைசி ஞாயிற்றுக்கிழமை நாள் சர்வதேச தொழுநோய் ஒழிப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதன்படி, இம்முறை சர்வதேச ரீதியில் நாளை மறுதினம் இத்தினம் முன்னெடுக்கப்படுகின்றது.

தொழுநோய் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு, தொழுநோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விசேட தெளிவுபடுத்தல் நடவடிக்கைகள் இலங்கையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நோயானது பாதிக்கப்பட்ட நபர் ஒருவரின் உமிழ்நீர் மற்றும் சளித் துளிகள் மூலம் மற்றொரு நபரின் சுவாச அமைப்பு வழியாக அவரின் உடலில் நுழைகிறது.

இன்று நாட்டில் 14 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே தொழுநோய் பரவும் அபாயம் அதிகம் காணப்படுவதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அது குறித்து நாட்டின் சுகாதார - மருத்துவ வட்டாரங்கள் விசேட சிரத்தையும் அவதானிப்பும் எடுப்பது கட்டாயமாகும்.



# சுவிஸில் பிரதமர் ஹரிணியுடன் சந்திப்பு

சுவிஸ் நாட்டில் உள்ள பிரபல தமிழ் வர்த்தகர்கள் உட்பட இலங்கை வம்சாவளி வர்த்தகர்கள் மற்றும் பிரமுகர்களைக் கொண்ட குழுவினர் நேற்று மதியம் இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உட்பட்ட குழுவினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

சுவிஸ் நேரப்படி நேற்று மதியம் The Circle Convention Centre, Zurich Airport இல் இச்சந்திப்பு நடைபெற்றது.

ஜெனிவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர தூதரகம் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.












# வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு
# புதிய அத்தியாயத்தின் ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு (NIS) வெற்றிகரமாக நிறைவடைந்ததுடன், அது வடக்கு மாகாணத்தின் எதிர்கால வளர்ச்சியில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளது.

இரண்டு நாள்கள் சுறுசுறுப்பாக நடைபெற்ற இந்த உச்சிமாநாடு, நீண்ட காலமாக தாமதமாகக் கருதப்பட்ட ஓர் அவசியமான முயற்சியை நிறைவேற்றியது.

அரசியல் தலைமைகள், முதலீட்டாளர்கள், தொழில்முறை நிபுணர்கள் மற்றும் புலம்பெயர் சமூகத்தை ஒரே நம்பகமான மேடையில் ஒன்றிணைத்து, வடக்கின் பொருளாதார எதிர்காலத்தைப் பற்றி ஆழமான கலந்துரையாடலை ஏற்படுத்தியது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த, பெரிய அளவிலான, தொழில்முறையாக ஒருங்கிணைக்கப்பட்ட முதலீட்டு உச்சிமாநாட்டை யாழ்ப்பாணம் முதல் முறையாக வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

இங்கு வெளிப்பட்ட செய்தி தெளிவானதும் ஒரே மாதிரியானதும் ஆகும். வடக்கு மாகாணம் இனி வளர்ச்சித் திட்டங்களின் ஓரத்தில் இல்லை. அது இப்போது ஒழுங்கமைக்கப்பட்ட, வெளிப்படையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய முதலீட்டுக்குத் திறந்ததாக உள்ளது.

இந்த உச்சிமாநாட்டின் மிக முக்கியமான பெறுபேறுகளில் ஒன்று, டிஜிட்டல் ஒரே சாளர முதலீட்டு தளம் (One Stop Investment Portal – OSSI) அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இந்த முயற்சி, செயல்முறைகளை எளிமைப்படுத்தவும், சிதறல்களை குறைக்கவும், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை



ராஜ் சிவநாதன்

உயர்த்தவும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் உருவாக்கப்படவுள்ள “ஒரே சாளர அனைத்து வள மையத்தின்” (One Stop All Resources Centre) செயலாளர் அலுவலகமாக ஆளுநர் அலுவலகம் செயல்படும் என அறிவிக்கப்பட்டது. இம்மையம் தொழில் முனைவோர்கள், முதலீட்டாளர்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் அனைத்து தலைமுறைகளையும் சேர்ந்த பங்குதாரர்கள், குறிப்பாக புலம்பெயர் சமூகத்தினருக்கு சேவை செய்யும்.

உச்சிமாநாடு முழுவதும் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் தரம் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. பல அரச அதிகாரிகள் தொழில்நுட்ப ரீதியாக வலுவானதும், அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையிலும் விளக்கவுரைகளை வழங்கினர். இது நிறுவன மனப்பாங்கில் ஏற்படும் ஒரு நேர்மறையான மாற்றத்தை பிரதிபலித்தது.

அதேபோல், தென் பகுதியைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முறை நிபுணர்கள் வழங்கிய தரவு சார்ந்த பகுப்பாய்வுகள் மற்றும் சந்தைப் பார்வைகள், வடக்கு வளர்ச்சியைப் பற்றிய புதிய கண்ணோட்டங்களைத் திறந்தன.

வடக்கு மாகாண ஆளுநர் என். வேதநாயகம், இரு நாள்களிலும் செயலில் பங்கேற்று, முதலீட்டாளர் ஆர்வம் அதிகரித்து வருகிற நிலையில், நிலையான முதலீட்டுக்கான அடித்தளம், அடிப்படை உட்கட்டமைப்பு வளர்ச்சியே என்பதை வலியுறுத்தினார். அவரது பங்களிப்பு, ஒருங்கிணைந்த திட்டமிடல், மாகாணத்திற்குள் மதிப்பு சேர்த்தல், மற்றும் மாவட்ட மட்டத்தில் சமநிலையான வளர்ச்சி ஆகியவற்றின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியது.

வலுவான தேசிய மட்டப் பங்கேற்பு, இந்த உச்சிமாநாட்டின் நம்பகத்தன்மையை மேலும் உயர்த்தியது.

நான்கு அமைச்சரவை அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் மற்றும் மூத்த செயலாளர்கள் பல அமர்வுகளில் கலந்து கொண்டனர். நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக சுனில் ஹந்துன்னெத்தி பங்கேற்றார். நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, வடக்கு முதலீட்டு உச்சிமாநாட்டின் மூலோபாய முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில், வடக்கின் பொருளாதார மாற்றத்தில் புலம்பெயர் சமூகத்தினர் அர்த்தமுள்ள வகையில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தும் ஒரு தாக்கமிக்க உரையை நிகழ்த்தினார்.

வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு வெறும் வெற்றிகரமான நிறைவையே அடையவில்லை. அது பார்வைகளை மாற்றியுள்ளது. நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. மேலும் நிறுவன ரீதியான அடித்தளங்களை அமைத்துள்ளது. யாழ்ப்பாணத்திற்கும், பரந்த வடக்கு மாகாணத்திற்கும், ஜேளு என்பது ஒரு முடிவு அல்ல் அது ஒரு புதிய தொடக்கமாகும்.

# நில ஆக்கிரமிப்பு, மொழி உரிமை மீறலுக்கு தொல்லியல் திணைக்களம் துணைபோகிறது

## ஏறாவூர் பிரதேச சபை உறுப்பினர் நிலாந்தன் சீற்றம்

(பழுவூரான்)

வட-கிழக்கிலுள்ள சிறுபான்மை இன மக்களின் நில ஆக்கிரமிப்பு மற்றும் மொழி உரிமை மீறலுக்கு சட்ட ரீதியாகத் துணைபோகும் திணைக்களமாக தொல்லியல் திணைக்களம் செயற்பட்டு வருகிறது என சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினருமான செ.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான முதலாவது சபை அமர்வில் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் நடப்பட்ட தொல்லியல் திணைக்களத்தின் பெயர்ப் பலகைகளை அகற்றுவது தொடர்பாக கொண்டு வரப்பட்ட பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்லியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் குழப்பத்தையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன. வட-கிழக்கில் உள்ள சிறுபான்மை இன மக்களின் நில ஆக்கிரமிப்பு மற்றும் மொழி உரிமை மீறலுக்கு சட்ட ரீதியாகத் துணை போகும் திணைக்களமாக தொல்லியல் திணைக்களம் செயற்பட்டு வருகிறது.



1987 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறி பிரதேச சபையின் அனுமதி இன்றி தொல்லியல் திணைக்களம் பெயர்ப் பலகைகளை இட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் தொல்பொருள் திணைக்களத்தினால் நடப்பட்ட பெயர் பலகைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள், பெயர் பலகைகளை அகற்றிய வர்கள் என்று கூறி 56 பேரை கைது செய்துள்ளனர. முன்னர் இருந்த எந்த அரசாங்கங்களும் செய்யாத செயற்பாட்டை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்துள்ளது.

இதைவிட தொல்லியல் திணைக்களத்தின் ஊடாக நடப்பட்ட அனைத்து பெயர் பலகைகளிலும் மொழி உரிமை மீறப்பட்டுள்ளது. இந்த நாட்டின் அரச கரும மொழிகளாக தமிழ், சிங்கள மொழிகள் காணப்படுகின்றன. அதேபோல் வட-கிழக்கின் நிர்வாக மொழியாக தமிழ் மொழியே காணப்படுகிறது. இவ்வாறு இருக்கும் நிலையில் வட-கிழக்கின் நிர்வாக மொழியான தமிழ் மொழியை முதலாவதாகவும், சிங்கள மொழியை இரண்டாவதாகவும் எழுதி இருக்க வேண்டும். ஆனால் தொல்லியல் திணைக்களத்தின் பெயர்ப் பலகைகளில் மூன்றாவதாகவே தமிழ் மொழி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் ஆட்சியின் கீழ் இருக்கும் பிரதேச சபைகளின் அதிகாரங்களை மீறி அரசியல் நோக்கங்களுக்காக, பிரதேசசபை சட்டங்களை மீறி, தொல்லியல் திணைக்களம் செயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

தொல்லியல் திணைக்களத்தினால் நடப்பட்ட பெயர் பலகைகள் அகற்றப்பட்டு பிரதேச சபையின் அனுமதி பெற்று, தமிழ் மொழியை முதன்மைப் படுத்தி மீளவும் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.



# யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு பல்கலை ஏற்பாட்டில் இரு நாள்கள்

## நாளையும் மறுதினமும் நடைபெறுகின்றது



யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை, இந்தியாவின் சுரானா மற்றும் சுரானா சட்ட நிறுவனத்துடன் இணைந்து 2026 ஆம் ஆண்டின் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாட்டை ஜனவரி மாதம் 24 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் (நாளையும் மறுதினமும்) நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

சுரானா மற்றும் சுரானா சட்ட நிறுவனத்துடன் 2024 ஆம் ஆண்டில் முதல்முதலாக கரம்கோர்த்து முதலாம் யாழ்ப்பாண சட்ட மாநாட்டை ஒழுங்கு செய்த யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை, 2025 ஆம் ஆண்டில் சர்வதேச சட்ட நிபுணர்களை இணைத்து அதனை யாழ்ப்பான சர்வதேச சட்ட மாநாடாகப் பரிணாமிப்பதில் வெற்றி கண்டதுடன், தொடர்ந்து இவ்வாண்டு மூன்றாவது முறையாக இச்சர்வதேச சட்ட மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

அந்தவகையில் இம்மூன்றாவது சர்வதேச சட்ட மாநாட்டு அமர்வுகள் மேற்படி இரு தினங்களும் யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கிலும் பிற அரங்குகளிலும் காலை 9 மணி முதல் மாலை வரை இடம்பெறவுள்ளன.

இதேநேரம் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வும் முதல் நாள் மாலை பண்பாட்டு நிகழ்வும் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெறும்.

“ஆய்வு, மறுவடிவமைப்பு. மீள்நிர்மாணம்“ எனும் தொனிப்பொருளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டில் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் பலர் கலந்துகொண்டு மாநாட்டின் தொனிப்பொருள் சார்ந்ததான பல்வேறு விடயப்பரப்புகள் தொடர்பில் உரையாடவுள்ளனர்.

மாநாட்டின் முதல் நாளன்று பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதியரசர் சிதம்பரம்பிள்ளை துரைராஜாவும், கௌரவ விருந்தினராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைவர் நீதிபதி ரோஹித்த அபேசூரியவும், சிறப்பு விருந்தினராக, வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் மேலதிக செயலாளரான சரண்யா ஹசந்தி உருகொடவத்தே திசாநாயகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் அன்றைய தினத்தின் பிரதம உரையாளர்களாக இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் நிர்வாக இயக்குனரான கலாநிதி மரியோ கோமெஸிம், பாரிஸ்டர் ஸாரா மண்டிவல்லா அக்பரால்டும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதல்நாள் நிகழ்வின் மற்றுமொரு பிரதான அம்சமாக “சட்டத்தின் எதிர்காலம் ஆட்சி நிர்வாகம், தொழிநுட்பம், சமூகம் மற்றும் உலக பொருளாதாரம்“ எனும் தொனிப்பொருளின் கீழான குழுக் கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலானது ஆட்சி நிர்வாகமும் சட்டவாட்சியும், சட்டமும் தொழிநுட்பமும், சமூக மற்றும் பண்பாட்டு பரிமாணங்கள், சூழலும் காலநிலை மாற்றமும், வணிகமும் எண்ணியல் பொருளாதாரமும் எனும் தலைப்புகளின் கீழ் நடைபெறவுள்ளதோடு இந்தத் தலைப்புகள் தொடர்பில் முறையே சட்டத்தரணி லூவி கணேசநாதன்,

இலங்கை ஜி.ரி.என். டெக்னால ஜிஸின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் ஜி.ரி.என். குழுமத்தின் உலகளாவிய பகிரப்பட்ட சேவைகள் தலைவர் அர்ஜுன நாணயக்கார,கலாநிதி பகீரதி ரசனென், பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் மற்றும் ஷெலானி.சி.டயாஸ் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்

அதனை தொடர்ந்து யாழ் மண்ணின் பண்பாட்டுச்சுவடுகளை பிரதிபலிக்கும் பண்பாட்டு நிகழ்வொன்றும் அன்றைய நாளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது, அன்றைய தினம் மாலை 6 மணி முதல் 9 மணி வரை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

மாநாட்டின் இரண்டாம் நாளன்று பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொடவும், கௌரவ விருந்தினராக மேன்முறையீட்டுநீதிமன்றநீதிபதிகலாநிதி,பிராங்க்குணவர்தனவும், சிறப்பு விருந்தினராக அரசாங்கத் துணைத் தலைமை வழக்குரைஞர் ஹரிப்ரியா ஜயசுந்தரவும் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் அன்றைய நாளின் சிறப்புரைகளை ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரனும் பேராசிரியர் சாந்தி செகராஜசிங்கமும் வழங்கவுள்ளனர்.

இரண்டாம் நாளின் மற்றொரு பிரதான நிகழ்வாக ஆட்சி நிர்வாகமும் சட்டவாட்சியும், சட்டமும் தொழிநுட்பமும், சமூக மற்றும் பண்பாட்டு பரிமாணங்கள், சூழலும் காலநிலை மாற்றமும், வணிகமும் எண்ணியல் பொருளாதாரமும் எனும் தலைப்புகளின் கீழ் ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக்கட்டுரைச் சுருக்கங்களை முன்வைக்கவுள்ளனர்.

மாநாட்டின் ஓரங்கமாக “செயற்றிட்டங்களிலிருந்து பங்காளித்துவத்திற்கு தூண்டுகோலாக மக்கள் பங்கேற்பு“ எனும் தொனிப்பொருளின் கீழான மாநாட்டு முன் சிறப்பு அமர்வு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது இன்று ஜனவரி மாதம் 23 ஆம் திகதி பிற்பகல் 3மணி முதல் 6 மணி வரை யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் பிரதேச செயலாளர் இ.விஜயகுமார், பொறியியலாளர் அ. ரொபர்ட் பீரிஸ். யாழ் பல்கலைக்கழக சமூகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆர்வலர் வைதேகி நரேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றி பயன்பெற்றுக்கொள்ளுமாறு மாநாட்டு ஒழுங்கமைப்புக்குழுவினர் கோரியுள்ளனர்.



# மீனவர்களுக்கு அதிக சலுகைகளுடன் கூடிய ஓய்வூதியத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை

மீனவர்களுக்கு அதிக சலுகைகளுடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி, நீரியல் வள திணைக்களம், விவசாய, கமநலக் காப்புறுதிச் சபை ஆகியன இணைந்து இந்த திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

மீனவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஓய்வூதியத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் தலைவர் பிரேமசிறி ஜாசிங்க ஆராச்சி தெரிவித்துள்ளார்.

# மின்சார சபை மறுசீரமைப்பு அடுத்த மாதம் நடைமுறைக்கு

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் நடைமுறையை எதிர்வரும் 30 நாள்களுக்குள் முன்னெடுப்பதற்கு எதிர்பாரத்துள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான அனைத்து வேலைத்திட்டங்களும் தற்போது இறுதி கட்டத்திலுள்ளதாக எரிசக்தி பிரதியமைச்சர் எம்.எம். அர்கம் தெரிவித்துள்ளார்.

இந்த மறுசீரமைப்பை துரிதப்படுத்துவதற்கான செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதற்கான அனைத்து வேலைத்திட்டங்களும் தற்போது இறுதி கட்டத்திலுள்ளதாக எரிசக்தி பிரதியமைச்சர் எம்.எம். அர்கம் தெரிவித்துள்ளார்.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

# மொத்த பணவீக்கம் உயர்வு



தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெணுக்கு அமைய, ஆண்டு அடிப்படையில் கணக்கிடப்படும் மொத்த பணவீக்க விகிதம் 2025 ஆண்டு டிசம்பரில் 2.9 வீதமாக உயர்ந்துள்ளது.

இது கடந்த 2025 நவம்பர் மாதத்தில் பதிவான 2.4 வீதத்துடன் ஒப்பிடுகையில், சற்று அதிகம் என்று குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், உணவுப் பொருட்களின் பணவீக்க 2025 டிசம்பரில் 4.4 வீதமாக உயர்ந்துள்ளது.

அத்துடன், உணவுப் பொருள்களைத் தவிர்த்த பணவீக்க 2025 டிசம்பரில் 1.6 வீதமாக உயர்ந்துள்ளதாக குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.









# இலங்கையின் விவசாயத் துறைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் சீனா

இலங்கையின் விவசாய துறையில் நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக சீனா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவுக்கும் சீன பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் விவசாயத் துறையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து உற்பத்தித் திறனை அதிகரிப்பது குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டின் விவசாயத் துறை மற்றும் அது சார்ந்த சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சீனாவின் தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தக்கூடிய விதம் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.





# கொழும்பு மாநகர சபையின் மோசடிகள் குறித்து பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கோரல்



கொழும்பு மாநகர சபையில் இடம் பெற்றுள்ளதாகக் கருதப்படும் ஊழல், மோசடிகள் குறித்து கண்டறியும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் மற்றும் தகவல்களைக் கோருகிறது.

2010 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பு மாநகர சபையில் இடம் பெற்றுள்ளதாகக் கருதப்படும் ஊழல் செயல்கள், மோசடிகள், குற்றவியல் ரீதியான நம்பிக்கை மீறல், அதிகாரம், அரசாங்க வளங்கள் மற்றும் வரப்பிரசாதங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் அல்லது துஷ்பிரயோகம் செய்தல் குறித்து கண்டறிய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவிற்காக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் மற்றும் தகவல்களைக் கோருவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் சட்டவிரோத ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் கொள்முதல் வழிகாட்டல்களை மீறுதல், அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுவதில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள், முறையான நடைமுறைகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகள் மற்றும் இணக்கப்பாடுகள், மேற்கூறிய செயல்களால் அரசாங்கத்தின் சொத்துக்கள் அல்லது வருமானத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய நட்டங்கள் மற்றும் சேதங்கள் குறித்தும் தகவல்கள் திரட்டப்படவுள்ளன என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆணைக்குழு தனது முதலாவது இடைக்கால அறிக்கையை மூன்று மாதங்களுக்குள்ளும், முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கிய இறுதி அறிக்கையை 06 மாதங்களுக்குள்ளும் ஜனாதிபதி செயலாளரிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

இது தொடர்பான ஏதேனும் எழுத்து மூல முறைப்பாடுகள் அல்லது தகவல்களைச் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் ஆணைக்குழுவின் செயலாளருக்கு "இலக்கம் 152, காலி வீதி, கொழும்பு 03" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தனிநபர்கள், அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து முறைப்பாடுகளும் 2026 பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அத்தகைய முறைப்பாடுகள் அல்லது தகவல்களை வழங்குபவர்களின் பெயர், முகவரி, தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி எண்கள், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் ஆகியவை அனைத்துச் சமர்ப்பிப்புகளிலும் குறிப்பிடப்பட வேண்டும்.

மேலும் தனது அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை எனின், அது தொடர்பில் ஆணைக் குழுவிடம் கோர முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவிடம் வாய்மூலச் சமர்ப்பிப்புகளைச் செய்ய விரும்பும் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள், 011 2 301 735 என்ற தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்வதன் மூலம் 2026 பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரான ஒரு திகதியை ஒதுக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 800 மில்லியன் ரூபா நட்டம்:

# அர்ஜுன ரணதுங்க, தம்மிக ரணதுங்கவுக்கு எதிராக மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை





முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் தம்மிக ரணதுங்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சுமார் 800 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

இது குறித்த விபரங்களை லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நேற்று கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

# பல்கலை கட்டமைப்பில் நிலவும் ஆளணி நெருக்கடி

## 7,400 க்கும் அதிகமான வெற்றிடங்கள்

இலங்கையின் உயர்கல்வித் துறையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் பல்கலைக்கழகங்களின் தற்போதைய நிலை குறித்து, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ள தரவுகள் நாட்டின் கல்விச் சூழலில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன.

சூரியன் செய்திப் பிரிவால் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட 2025 ஜனவரி மாத புள்ளிவிபரங்களின்படி, அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கைக்கும் தற்போது பணியிலுள்ளோருக்கும் இடையே பாரிய இடைவெளி நிலவுகிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரவுகளின்படி, நாட்டின் பல்கலைக்கழகக் கட்டமைப்பில் ஒட்டுமொத்தமாக 7,418 பணியாளர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இது ஒட்டுமொத்த பணியாளர் எண்ணிக்கையில் 25 வீதமாகும்.

பல்கலைக்கழகங்களின் முதுகெலும்பாக விளங்கும் நிரந்தர கல்விசார் பணியாளர் பதவிகளுக்காக 9,332 இடங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

எனினும், தற்போது 6,946 பேர் மட்டுமே பணியில் உள்ளனர்.

இதன் காரணமாக 2,048 பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் நிலவும் நிரந்தரக் கல்விசார் பணியாளர் வெற்றிடங்கள் கற்பித்தல் தரத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகம் அதிகபட்சமாக 305 நிரந்தர விரிவுரையாளர் வெற்றிடங்களைக் கொண்டுள்ளது.

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் 273 வெற்றிடங்களுடன் இயங்கி வருகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் 227 இடங்களும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 179 நிரந்தர விரிவுரையாளர் பணியிடங்களும் ருகுணு பல்கலைக்கழகத்தில் 195 வெற்றிடங்களும் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன.

தற்காலிக விரிவுரையாளர்கள் மற்றும் உதவியாளர்கள் பிரிவில் 3,742 இடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், 3,186 பேர் பணியில் உள்ளனர், இங்கு 725 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

நூலகர், தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவியாளர்கள் உள்ளிட்ட பிரிவில் 16,351 பணியாளர் இடங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ஆனால், தற்போது 11,875 பேர் மட்டுமே பணியில் இருப்பதால், இப்பிரிவில் மாத்திரம் 4,476 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவற்றில் நூலகர் பதவிகளுக்கு 41 வெற்றிடங்களும் முகாமைத்துவ மற்றும் நிதி பிரிவுக்கு 205 வெற்றிடங்களும் ஏனைய நிறைவேற்று அலுவலர் பதவிகளுக்கு 90 வெற்றிடங்களும் மருத்துவ அதிகாரி பதவிகளுக்கு 43 வெற்றிடங்களும் கல்விசார் ஒத்துழைப்பு அலுவலர் பதவிகளுக்கு 377 வெற்றிடங்களும் தொழில்நுட்ப பதவிகளுக்கு 687 வெற்றிடங்களும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு 794 வெற்றிடங்களும் முதன் நிலை பணியாளர் பதவிகளுக்கு 2239 வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆகஸ்ட் வரையிலான குறுகிய காலப்பகுதியில் மட்டும் 566 நிரந்தர விரிவுரையாளர்கள் தமது சேவையை விட்டு விலகியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலோர் வெளிநாடுகளுக்குச் சென்றமை அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காகப் பதவி விலகியமை குறிப்பிடத்தக்கது.

இவற்றில் 329 விரிவுரையாளர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர், 106 பேர் ஓய்வுபெற்றுள்ளனர், வெளிநாடு செல்லுதல் உள்ளிட்ட தனிப்பட்ட ஏனைய காரணங்களுக்காக 131 பேர் வெளியேறியுள்ளனர்.

இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக கடந்த வருடம் அரசாங்கம் 1,209 கல்விசார் பணியாளர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும், பல்கலைக்கழகங்கள் தமது நிதி ஒதுக்கீட்டிற்குள் இருந்து தேவையான புதிய விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வழிகாட்டல்களையும் பிரதமர் அலுவலகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 26ஆம் திகதி முதல் நெல் கொள்வனவு



எதிர்வரும் 26ஆம் திகதி முதல் நெல் சந்தைப்படுத்தல் சபையினூடான நெற்கொள்வனவு ஆரம்பிக்கப்படும்எனஅமைச்சர்கே.டீ.லால்காந்ததெரிவித்துள்ளார்.

கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வன்னி உட்பட வடக்கு கிழக்கில் பெரும்போக நெல் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக நெற்கொள்வனவை விரைந்து ஆரம்பிக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முன்வைத்த கோரிக்கைக்குப் பதில் வழங்கும் போதே, அமைச்சர் கே.டீ.லால்காந்த இதனைக் கூறியுள்ளார்.

அமைச்சுசார் ஆலோசனைக்குழு கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்துரைத்தார்.




# ஜம்மு காஷ்மீரில் 200 அடி பள்ளத்தில் வாகனம் கவிழ்ந்து 10 வீரர்கள் மரணம்

ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் 200 அடி ஆழ பள்ளத்தில் இராணுவ வாகனம் கவிழ்ந்த விபத்தில் 10 வீரர்கள் உயிரிழந்தனர். 11 வீரர்கள் காயம் அடைந்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்காக இராணுவ வாகனம் ஒன்று நேற்று சென்று கொண்டிருந்தது. குண்டு துளைக்காத இந்த வாகனத்தில் 20 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் இருந்தனர்.

இந்நிலையில் பதேர்வா-சம்பா சாலையில், 9,000 அடி உயரம் உள்ள கன்னி டாப் பகுதியில் செல்லும்போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம், 200 அடி ஆழமுள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் அந்த வாகனம் உருக்குலைந்தது.

விபத்து குறித்து இராணுவத்தின் ஒயிட்நைட் படைப் பிரிவு வெளியிட்டுள்ள “எக்ஸ்” பதிவில், ‘ஒரு இராணுவ நடவடிக்கைக்காக துருப்புகளை ஏற்றிச் சென்ற வாகனம் தோடாவில் ஆபத்தான நிலப்பரப்பில் பயணித்தபோது மோசமான வானிலை காரணமாக சாலையில் இருந்து தவறிவிழுந்தது’ என்று கூறப்பட்டுள்ளது.

விபத்தை தொடர்ந்து சம்பவ இடத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் உடனடியாக மீட்புப் பணிகளை தொடங்கினர். இதில் 4 வீரர்கள் சடலமாகவும் 17 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். காயம் அடைந்தவீரர்கள் பதேர்வா அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இங்கு சிகிச்சை பலனின்றி 6 பேர் உயிரிழந்தனர். இதனால் விபத்தில் உயிரிழந்த வீரர்கள் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்தது. 11வீரர்கள்உயர்சிகிச்சைக்காக உதம்பூர் ராணுவ மருத்துவமனைக்கு ஹெலிக்கொப்டர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்து குறித்து பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித் ஷா, ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, முதல்வர் உமர் அப்துல்லா, முன்னாள் முதல்வர்கள் குலாம் நபி ஆசாத், மெகபூபா முப்தி, காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “தோடாவில் நடந்த துயரச் சம்பவத்தால்மிகுந்த வேதனை அடைந்துள்ளேன். இதில் நமது துணிச்சலான இராணுவ வீரர்கள் சிலரை நாம் இழந்துவிட்டோம். தேசத்துக்கு அவர்கள் ஆற்றிய சேவை என்றென்றும் நினைவுகூரப்படும். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன” என்று தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் அமித்ஷா ‘எக்ஸ்’ சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“ஜம்மு காஷ்மீரின் தோடா பகுதியில் நடந்த சாலை விபத்தால் மிகுந்த வேதனை அடைந்துள்ளேன். இந்த துயரச் சம்பவத்தில் நாம் இழந்த வீரத் தியாகிகளின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறேன். காயமடைந்த வீரர்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து வீரர்களும் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.”என்று தெரிவித்துள்ளார்.

# ஜார்க்கண்ட் ‘என்கவுன்ட்டரில்’ 15 மாவோயிஸ்ட்கள் மரணம்


ஜார்க்கண்ட் மாநிலத்தின் மேற்கு சிங்பும் மாவட்டத்தில் மாவோயிஸ்ட்டுகள் 15 பேரை, பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர். இவர்களில் 1 கோடி ரூபா பரிசு அறிவிக்கப்பட்ட மூத்த தலைவர் அனல் டாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சத்தீஸ்கர் மற்றும் ஜார்க்கண்டில் மாவோயிஸ்ட்டுகளை ஒழிக்கும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சரணடையும் மாவோயிஸ்ட்களுக்கு மறுவாழ்வுக்குத் தேவையான உதவிகள் செய்யப்படுகின்றன. சரணடைய மறுக்கும் மாவோயிஸ்ட்கள் பாதுகாப்பு படையினரால் வேட்டையாடப்படுகின்றனர்.

இந்நிலையில் ஜார்க்கண்ட் மாநிலத்தின் மேற்கு சிங்பும் மாவட்டத்தில் உள்ள சரந்தா வனப்பகுதியில் மாவோயிஸ்ட் மூத்த தலைவர் அனல் டா தனது கூட்டாளிகளுடன் இருப்பதாக பொலிஸாருக்கு உளவுத் தகவல் கிடைத்தது. இதையடுத்து மாவோயிஸ்ட் வேட்டைக்காக உருவாக்கப்பட்ட மத்திய ரிசர்வ் காவல் படையின் கோப்ரா பிரிவைச் சேர்ந்த 1,500 வீரர்கள் நேற்று காலை 6 மணிக்கு சரந்தா வனப்பகுதிக்குள் நுழைந்து தேடுதல் வேட்டையை தொடங்கினர். இந்நிலையில் கும்டி என்ற இடத்தில் தேடுதல் வேட்டை நடைபெற்ற போது பாதுகாப்பு படையினருக்கும், மாவோயிஸ்ட்களுக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்றது.

இதில் மாவோயிஸ்ட்கள் 15 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மாவோயிஸ்ட்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அங்கு தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெறுகிறது. இறந்தவர்களில்ஒருவர்பட்ராம்மாஜிஎன்றஅனல்டா என்பது தெரியவந்துள்ளது. இவரைப் பற்றி தகவல் அளிப்பவருக்கு 1 கோடி ரூபா பரிசு என அறிவிக்கப்பட்டிருந்தது.

இவர் கிரிதி மாவட்டத்தின் பிர்தந்த பகுதியைச் சேர்ந்தவர். கடந்த 1987 ஆம்



ஆண்டில் இருந்து இவர் மாவோயிஸ்ட் இயக்கத்தில் உள்ளார். இவரை பொலிஸார் பல ஆண்டுகளாக தேடி வருகின்றனர்.

ஜார்க்கண்ட் மாநிலத்தின் புதா பகத், சத்ரா, லதேகர், கும்லா, லோகர்தாகா, ராஞ்சி மற்றும் பரஸ்நாத் ஆகிய பகுதிகளில் மாவோயிஸ்ட்களின் ஆதிக்கத்தை பாதுகாப்பு படையினர் முற்றிலும் ஒழித்துவிட்டனர். கோல்கன் மற்றும் சரந்தா வனப்பகுதி மட்டுமே தற்போது மாவோயிஸ்ட்கள் ஆதிக்கம் உள்ளது. இந்நிலையில் சரந்தா வனப் பகுதியில் 15 மாவோயிஸ்ட்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

# மக்கள் நீதி மய்யத்துக்கு ‘டோர்ச் லைட்’ சின்னம்!

2026 சட்டப்பேரவை தேர்தலுக்காக மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு டார்ச் லைட் சின்னத்தை தேர்தல் ஆணையம் ஒதுக்கியுள்ளது.

முன்னதாக கடந்த 2019 மக்களவைத் தேர்தல் மற்றும் 2021 சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் அக்கட்சி இதே சின்னத்தில்தான் போட்டியிட்டது.

2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மக்கள் நீதி மய்யம் கட்சி 2019 மக்களவை மற்றும் 2021 சட்டப்பேரவைத் தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டது. அதனை தொடர்ந்து 2024 மக்களவைத் தேர்தலில் கமல்ஹாசன் திமுகவுடன் கூட்டணி அமைத்தார். ஆனால், அந்த தேர்தலும் ம.நீ.மவுக்கு தொகுதிகள் வழங்கப்படவில்லை.

இருப்பினும், தி.மு.க. கூட்டணி சார்பாக கடந்த ஆண்டு கமல்ஹாசன் மாநிலங்களவை எம்.பியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2026 சட்டப்பேரவை தேர்தலிலும் ம.நீ.ம, தி.மு.க. கூட்டணியிலேயே தொடர்கிறது. இந்த சூழலில்தான் அக்கட்சிக்கு டோர்ச் லைட் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. டோர்ச் லைட் மக்கள் மத்தியில் ஏற்



கனவே பரிச்சயமான சின்னம் என்பதால், இது அக்கட்சிக்கு சாதகமாக இருக்கும் என பார்க்கப்படுகிறது.

# ஒஸ்கார் வரலாற்றில் புதிய உலக சாதனை: 16 பரிந்துரைகளை அள்ளியது ‘சின்னர்ஸ்’

ரியான் கூக்ளர் இயக்கத்தில் உருவான “சின்னர்ஸ்“ என்ற திகில் திரைப்படம், 2026 ஆம் ஆண்டிற்கான ஒஸ்கார் விருதுப் பட்டியலில் 16 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டு புதிய சாதனை படைத்துள்ளது.

இதன் மூலம் இதற்கு முன்னதாக “டைட்டானிக்“ , “ஆல் அபௌட் ஈவ்“ மற்றும் “லா லா லேண்ட்” ஆகிய திரைப்படங்கள் தலா 14 பரிந்துரைகளுடன் பெற்றிருந்த சாதனையை “சின்னர்ஸ்“ முறியடித்துள்ளது.




# உலகின் மிகவும் பழமையான குகை ஓவியம் கண்டுபிடிப்பு

உலகின் பழமையான குகை ஓவியம் இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த குகை ஓவியம் சுமார் 67,800 ஆண்டுகள் பழமையானது என தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேசியாவில் கடற்கரையில் உள்ள முனா தீவில் ஒரு குகையில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டபோது ஒரு சுண்ணாம்புக் குகையின் சுவரில் மனிதனால் உருவாக்கப்பட்ட பாறை ஓவியங்களை கண்டுபிடித்தனர்.

குகையின் சுவரில் காணப்படும் சிவப்பு நிற கை ஓவியம், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதிலேயே மிகவும் பழமையான பாறை ஓவியம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

மற்ற ஓவியங்களில் பறவைகளின் தலைகள் மற்றும் பிற விலங்குகளின் அம்சங்களைக் கொண்ட மனித உருவங்கள் காணப்பட்டன.

குகைச் சுவரில் கைகளை வைத்து, அதன் மேல் நிறமிகளை ஊற்றி இந்த உருவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதில் சில விரல் நுனிகள் கூர்மையாக தெரியும் வகையில் மாற்றியமைக்



கப்பட்டுள்ளன.

இந்த குகை ஓவியம் சுமார் 67,800 ஆண்டுகள் பழமையானது என்றும் இது ஸ்பெயினில் உள்ள 66,700 ஆண்டுகள் பழமையான நியண்டர்தால் கை அச்சை விட சற்றே பழமையானது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.




# காசா போர் நிறுத்த மேற்பார்வைக்கு அமைதி வாரியம் தொடங்கினார் ட்ரம்ப்

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தத்தை மேற்பார்வையிட அமைதி வாரியம் என்ற புதிய அமைப்பை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் முறைப்படி தொடங்கி வைத்தார்.

டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டில் இதுகுறித்து ட்ரம்ப் உரையாற்றுகையில்,

“அமைதி வாரியம் அமைப்பில் இணைய அனைவரும் ஆர்வம் காட்டுகின்றனர். வருங்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கே இது சவாலாக விளங்கும். இருப்பினும், அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடுகள் பல இந்த அமைப்பில் சேர மறுப்புத் தெரிவித்துள்ளன.

காசாமுனையின்எதிர்காலத்தைவடிவமைக்கும் நோக்கில் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது அமெரிக்காவுக்கானது மட்டுமல்ல, உலகுக்கானது. காசாவில் வெற்றி பெற்ற பிறகு, மற்ற உலகப் பிரச்சினைகளுக்கும் இந்த அமைப்பை விரிவாக்கம் செய்வோம்.” என்று தெரிவித்துள்ளார்.




அசர்பைஜான் முதல் பராகுவே வரை சுமார் 59 நாடுகள் இதில் கையெழுத்திட்டுள்ளதாக தெரிவித்த ட்ரம்ப், அங்கு கூடியிருந்த தலைவர்களை நோக்கி, “நீங்கள் உலகிலேயே அதிகாரம் மிக்கவர்கள் எனது நண்பர்கள்” என்று குறிப்பிட்டார். அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகள் இந்த அமைதி வாரியத்தில் இணைய மறுத்துவிட்டன.

முடிவெடுக்காத இந்தியா.. இந்தியா, சீனா, சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகள் இந்த அமைப்பில் சேருவது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை.

அமைதி வாரிய தொடக்க நிகழ்வில் அமெரிக்க வெளி உறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, ட்ரம்பின் மருமகன் ஜாரெட் குஷ்னர், சவூதி அரேபியா, அர்ஜென்டினா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.









# இன்றைய ராசி பலன்கள் - 23.01.2025




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலையம் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத் திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்க ளுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணை யுடன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று உற்சாகமான நாளாக இருக் காது.இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிபார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பராமரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பிக்கை அதிக ரிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடின மாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.

பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.சூழ்நிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத் தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ்நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படு வீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக் கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் கடன் வாங்க நேரலாம்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற் கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றிக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிக பொறுப்புகள் காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளி தில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறு வீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஏழை மற்றும் உடல் ஊனமுற் றோருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன்படுத் திக் கொள்ளுங்கள்.இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்கலாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும். தேவை யற்ற செலவுகள் செய்ய வேண்டியிருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.01.2025




இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். இன்று திருப்தி நிலவும்.

உங்கள் பணியில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட்புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.




இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம்படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகள முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள்.

# அரசால் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் விவரம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திடம் இல்லை






வன ஜீவராசிகள், வன பாதுகாப்பு, கரையோர பாதுகாப்பு திணைக்களங்கள் ஆகியவற்றால் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கையகப்படித்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பான விவரம் எதுவும் இல்லை என வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் தகவல் வழங்கியுள்ளது.

காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் இ. முரளிதரனால் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய தகவலுக்கு அச்செயலகம் வழங்கிய பதிலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பல ஏக்கர் தனியார் காணிகள் உட்பட அரச காணிகளும் வன ஜீவராசிகள் திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களம், கரையோர பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றால் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சட்ட முரணாக கைப்பற்றப் பட்டுள்ளன எனவும், அவற்றை விடுவிக்குமாறுன் மக்களால் பல தடவைகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உட்பட பல கூட்டங்களில் கோரிக்கை விடுக்க பட்டிருந்த நிலையில் இவ்வாறு இந்தத் திணைக்களங்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பான விவரம் இல்லை எனக் குறிப்பிடப்படுவது வியப்பாகவுள்ளதாக காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவர் இ.முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.